1987 ஏப்ரல் 4]

கூடிய அடிப்படை வசதிகளை செய்து கொள்ள நன்கொடை வசூலிப்பது ஒன்றும் குற்றம் இல்லை. உண்மையிலேயே அது உற்சாகப்படுத்தி ஊக்கப்படுத்த வேண்டிய ஒன்று. சீரமைப்பு மாநாடு என்ற அமைப்பின்கீழ் கிட்டத்தட்ட எல்லாப் பள்ளிகளிலும் இப்படி அமைக்கப்பட்டு பெற்றோர்-ஆசிரியர் சங்கத்தைச் சார்ந்தவர்கள் பள்ளிக்கு வேண்டிய அடிப்படை வசதிகளைப் பெறவும், தளவாட சாமான்கள் வாங்கவும் நடவடிக்கை எடுத்து வருகிறார்கள். அரசு அதற்கு ஊக்கம் அளிக்கிறது. தமிழகத்தில் மட்டுமல்ல, எல்லா மாநிலங்களிலும் கடந்த இரண்டு மூன்று ஆண்டுகளாக மைய அரசினுடைய மனித வள மேம்பாட்டுத் துறையினுடைய விருப்பத்திற்கு ஏற்ப அது நடைபெற்று வருகிறது.

1985-ல் லாட்டரி மூலம் அரசுக்குக் கிடைத்த வரி.

295—(* வினா எண் 9847) திரு. கே. உச்சி : மாண்புமிகு வணிக வரித் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) 1985-ம் ஆண்டில் லாட்டரி டிக்கெட் மூலம் அரசுக்குக் கிடைத்த வரித்தொகை எவ்வளவு ?

(ஆ) அது எந்த வகையில் செலவிடப்படுகிறது ?

மாண்புமிகு திரு. த. இராமசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே. (அ) 1985-ம் ஆண்டில் (ஜனவரி 1985 முதல் டிசம்பர் 1985 வரை) லாட்டரி டிக்கெட் மூலம் அரசுக்குக் கிடைத்த வரித் தொகை 1,40,63,623 ரூபாய் ஆகும்.

(ஆ) அது, அரசின் பொது வருவாய்க் கணக்கில் சேர்க்கப்பட்டு செலவிடப்படுகிறது.

திரு. ஆ. சிவக்குமார் : தலைவர் அவர்களே, இந்த வரியை ஏமாற்றுகிற வகையில் கேரள மாநிலத்தின் எல்லையில் சில நிறுவனங்களை அமைத்துக்கொண்டு லாட்டரி சீட்டு விற்பனை

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS

நடத்துபவர்கள் மீது அரசு தக்க நடவடிக்கையெடுக்குமா என்று அறிய விரும்புகிறேன். அதோடு மொத்த விற்பனையாளர்கள் சிலர் கள்ளத்தனமாக லாட்டரி சீட்டுகளை அச்சடித்து விற்பனை செய்வது அரசுக்குத் தெரியுமா? அதன்மீது அரசு என்ன நடவடிக்கையெடுத்திருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, வெளிமாநில பரிசுச் சீட்டுகளுக்கு நம்மைச் சுற்றியுள்ள மாநிலங்களில் விற்பனை வரி கிடையாது. எனவே நமது மாநிலத்தின் எல்லையை ஒட்டி அவர்கள் கடைகளை அமைத்துக்கொண்டு சீட்டுக்களை விற்கிறோம் என்று ரெக்கார்டு செய்து கொண்டிருக்கிறார்கள். இருந்தாலும் கூட அதைத் தடுப்பதற்காக இந்தத் துறை மூலமாக தீவிரமாக நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அந்த அடிப்படையில் இதுவரையில் 233 இனங்களில் வரி ஏய்ப்பு கண்டு பிடிக்கப்பட்டு இணக்கத் தொகையாக ரூபாய் 5,23,915-ம் கண்டனை தொகையாக ரூ. 5,939-ம் வசூலிக்கப்பட்டிருக்கிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. அ. மலர்மன்னன்: தலைவர் அவர்களே, நமது அமைச்சர் அவர்கள் வெளிமாநிலங்களில் உண்மையாக அச்சடிக்கப்பட்டு இங்கே விற்கப்படுவதற்கு வரி வசூலிக்கப்படுவது பற்றிச் சொன்னார்கள். ஆனால் இன்றையதினம் போலியான பரிசுச் சீட்டுகள் தமிழ்நாட்டில் அச்சடிக்கப்பட்டு விற்கப்படுகின்றன. இப்படிப் போலியாக பரிசுச் சீட்டுகள் அச்சடிக்கப்படுவதால் அவர்களைக் கண்டுபிடித்து தக்க நடவடிக்கையை இந்த அரசு எடுக்குமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, போலியாக சீட்டுகள் அச்சடிக்கப்பட்டு விற்கப்படுவதாக மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிடுகிறார்கள். அது சம்பந்தமாக அவர்கள் வேண்டிய குறிப்புகளை அரசுக்குத் தருவார்களானால் உரியவகையில் கவனிக்கப்படும். இருந்தாலும் கூட அதுபோன்ற புகார் வரவில்லையென்றாலும், அரசு இதிலே தீவிர கவனம் செலுத்தி வருகிறது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

1987 ஏப்ரல் 4]

திரு. எச். ஜி. ஆறுமுகம்: தலைவர் அவர்களே, இங்கே லாட்டரி சீட்டு மூலமாக எவ்வளவு வரி நமது அரசிற்குக் கிடைத்திருக்கிறது என்ற விவரத்தை நமது அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். ஆனால் பரிசு விழுந்து பெறாத தொகை எவ்வளவு இருக்கிறது என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. த. இராமசாமி: தலைவர் அவர்களே, தனிக் கேள்வி போடும்படியாகக் கேட்டுக் கொள்கிறேன்.

வரி ஏய்ப்பை ஒழிக்கத் திட்டம்.

296—(* வினா எண் 11561) **திரு. செ. செம்மலை:** மாண்புமிகு வணிகவரித்துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) வரி ஏய்ப்பை ஒழிக்க அரசிடம் தனித்திட்டம் ஏதேனும் உள்ளதா?

(ஆ) ஆம் எனில், அதன் விவரம் யாது?

மாண்புமிகு திரு. த. இராமசாமி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, (அ) ஆம்.

(ஆ) வரி ஏய்ப்பைப்பற்றி வரும் புகார்கள் மீது வணிகவரித் துறையின் செயலாக்கப் பிரிவினரால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகிறது. தேவையான இனங்களில் கடைத்தணிக்கை மற்றும் வீட்டுத்தணிக்கை மேற்கொள்ளப்படுகிறது. திட்டவட்டமாக வரி ஏய்ப்புப்பற்றி புலன் கூறும் தனி நபர்களுக்கும், தனி இனங்களில் ரூ. 25,000 வரிக்குக் குறையாமல் புலனாய்வு செய்து வரி ஏய்ப்பு கண்டுபிடிக்கும் அலுவலர்களுக்கும் வெகுமதி அளிக்கும் திட்டம் நடைமுறையில் உள்ளது.

தணிக்கைச் சாவடிகள், தனிப் பிரிவுகளின் மூலமாகவும் தீவிர கண்காணிப்பு செய்து வரி ஏய்ப்பு தடுப்பு நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. வரி ஏய்ப்பு வாய்ப்பு அதிகமாக உள்ள இனங்களில் தனிக் கவனம் செலுத்தப்பட்டு வரி ஏய்ப்புக்கு எதிராக நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.